# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.73/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 6 | நாள் | : | 19.07.2025 |
| பெயர் | : | பொட்டல் கருப்பையா | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 19th day of July 2025.

**எதிரிகள் ஆஜர்**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் சிவகிரியில் வசித்து வருகிறேன். நான் LIC முகவராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்புவதாக எங்கள் ஊரில் போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது அதைப் பார்த்து நான் வெளிநாடு செல்வதற்காக சங்கரன்கோவில் மின்வாரிய அலுவலகம் அருகே இருந்த பயாட் நிறுவனத்தில் ரூ.75,000/- பணம் செலுத்தினேன். 23.11.2012 அன்று பணம் செலுத்தினேன். 2 வது எதிரி அந்த அலுவலகத்தில் இருந்தார். அவரிடம் விளக்கம் கேட்டேன் அவர் சொன்னார். ஒரு மாதத்திற்குள் கடிதம் வரும் என்று சொன்னார்கள். ஒரு மாதம் கழித்து கேட்டபோது அங்கிருந்து

கரிவலம்வந்தநல்லூருக்கு அலுவலகத்தை மாற்றினார்கள். எனவே நாங்கள் மீண்டும் கரிவலம்வந்தநல்லூர் வந்து விசாரித்தபோது மேலும் ஒரு மாதத்திற்கு மேலாகும் என்று சொன்னார்கள். அதன்பின்னரும் கடிதம் ஏதும் வரவில்லை. சுமார் 6 மாதம் வரை ஏதும் தெரியவில்லை. பின்னர் ஒரு வருடம் கழித்து சென்று கேட்டபோது பணத்தை திரும்ப வட்டியுடன் தந்துவிடுகிறோம் என்று சொன்னார்கள். அதன்பின்னரும் பணம் கிடைக்கவில்லை. அவர்கள் எனக்கு எழுதிக் கொடுத்த கடிதம் என் வசம் உள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 16 ஆண்டுகளாக LIC முகவராக உள்ளேன். வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்ப அரசு அலுவலகம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சங்கரன்கோவிலில் LIC அலுவலகம் உள்ளது. போலீசார் என்னிடம் சங்கரன்கோவிலில் எதிரியின் அலுவலகம் உள்ளதா என்று கேட்கவில்லை நானும் கூறவில்லை. நான் வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்வதற்கு எதிரி நிறுவனம் என்னிடம் கடவுச் சீட்டை வாங்கினார்கள் அவர்களிடமிருந்து என்னுடைய கடவுச் சீட்டை திரும்ப பெற்றுக் கொண்டேன். நான் எதிரிகள் நிறுவனம் மூடப்பட்டுவிட்டதை செய்தியாக தெரிந்து கொண்டேன். நான் நேரடியாக என்னை பணம் கொடுக்காமல் ஏமாற்றியதற்கோ வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை என்பதற்கோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பயாட் நிறுவனத்திற்கு 50 மீட்டர் தொலைவிலேயே கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம்

உள்ளது என்றால் சரியல்ல. சங்கரன்கோவில் சென்று பணம் கேட்டதாகவும், பின்னர் கரிவலம்வந்தநல்லூர் வந்து பணம் கேட்டதாகவும் ஒரு வருடம் கழித்து மீண்டும் பணம் கேட்கச் சென்றதாகவும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன். போலீசாரில் காவலர், தலைமைக்காவலர், உதவி ஆய்வாளர், ஆய்வாளர், துணை கண்காணிப்பாளர், கண்காணிப்பாளர் பதவி நிலை பற்றி எனக்கு தெரியாது. அதனால் என்னை யார் விசாரித்தார்கள் என்றும் கூற இயலாது. விசாரிக்க வந்த அலுவலர்களிடம் எனக்கு எதிரி மீண்டும் ஒரு ஒப்புதல் எழுதிக் கொடுத்தார்கள் என்று எனக்கு எழுதி கொடுத்த தாளை ஒப்படைக்கவில்லை. கடவுச் சீட்டை ஒப்படைத்ததாகவும் திரும்ப பெற்றுக் கொண்டதாகவும் கூறவில்லை. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சங்கரன்கோவிலுக்கு சென்று பணம் செலுத்தியதாகவும் அங்கு 2ம் எதிரி வேலைக்கு அனுப்பி வைப்பதாக சொன்னதாகவும் நான் கரிவலம்வந்தநல்லூர் வந்து எதிரி நிறுவனத்தில் பணம் கேட்டதாகவும் அவர்கள் மீண்டும் ஓர் ஆண்டுக்கு பின்னர் பணம் தருவதாக கூறி ஆவணங்கள் எழுதிக் கொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.19 17:40:17 +0530

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.73/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 5 | நாள் | : | 19.07.2025 |
| பெயர் | : | ஞானப்பாண்டியன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 19th day of July 2025.

**எதிரிகள் ஆஜர்**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் திருவேங்கடத்தில் தெற்கு பாறைப்பட்டியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி முருகேசனை தெரியும். அவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். வெளிநாட்டிற்கு வேலைக்கு ஆட்கள் அனுப்புவதாக ஊரில் துண்டு பிரசுரங்கள் விநியோகிகப்பட்டது. அதைப்பார்த்து கரிவலம்வந்தநல்லூரில் உள்ள பயாட் என்ற நிறுவனத்தில் பணம் கட்டினேன். நான் வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்ல அந்த நிறுவனத்தில் ரூ.75000/- பணம் கட்டினேன். 2012 ஆண்டு நவம்பர் மாதம் பணம் செலுத்தினேன் தேதி ஞாபகமில்லை. அவ்வாறு பணம் செலுத்தியதும் 1 மாதம் அல்லது

2 மாதத்திற்குள் தகவல் தெரிவிப்பதாக சொன்னார்கள். மேலும் என்னுடைய பாஸ்போர்ட்டையும் வாங்கி கொண்டார்கள். இன்று என்னிடம் காட்டப்படும் கடவுச் சீட்டு எனக்குரியதுதான். அது அ.சா.ஆ.2 ஆகும். ஆனால் வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை. 2 , 3 முறை நான் பயாட் நிறுவனம் சென்று விசாரித்தபோது பொறுங்கள் அனுப்புவோம் என்று சொன்னார். 1ம் எதிரிதான் அதன் நிர்வாகி ஆவார். அந்த நிறுவனத்தில்தான் பணம் கட்டினேன். மற்ற இரண்டு எதிரிகளும் நான் பணம் செலுத்த சென்றபோதும் கேட்கச் சென்றபோதும் நான் பார்த்துள்ளேன். நான் வெளிநாட்டிற்கு செல்லவேயில்லை. 2013 ஆண்டு ஜூன் மாதம் என் பணத்தையாவது திருப்பிக் கொடுங்கள் என்று கேட்டேன். முதலில் பேசிய தன்மையை மாற்றி பேசினார்கள். எங்கள் ஊரைச் சேர்ந்த முருகேசன் என்பவர் புகார் கொடுத்திருப்பதாக சொன்னார். ஆனால் நான் கொடுக்கவில்லை. போலீசார் இரண்டுபேர் என் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். போலீசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை. 2013ம் ஆண்டு போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரித்தபோது நான் தற்போது கூறிய விவரங்களைத்தான் கூறினேன். எனக்கு பணத்தை திரும்ப பெற்றுத் தரும்படி நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. முருகேசனுடன் நான் புகார் கொடுக்கச் செல்லவில்லை. அவர் கொடுத்த புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது

என்று எனக்கு நேரில் தெரியாது. பணத்தை எப்போது கேட்டேன் யார் மூலம் கேட்டேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய கடவுச் சீட்டை திரும்ப பெற நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் பணம் கொடுக்கும் போது இருந்த தன்மையில் இருந்து மாறி பேசினார்கள் என்று கூறவில்லை என்றால் சரிதான். கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்திற்கு மிக அருகில் பயாட் நிறுவனம் அமைந்திருந்தது என்றால் சரிதான். நான் அவ்வாறு பணம் கேட்கச் செல்லும்போது அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்று பணம் கொடுத்திருந்தேன் அதைக் கேட்க வந்திருந்தேன் என்று கூறவில்லை. போலீசாரிடம் பணம் கட்டிய இரசீது எதையும் கொடுக்கவில்லை. நான் கூறுவது போல் எங்கள் ஊரில் பயாட் நிறுவனம் வேலைக்கு ஆட்களை அனுப்புவதாக துண்டு பிரசுரங்களை விநியோகித்ததாக கூறுவதும்அதனடிப்படையில் நான் கரிவலம்வந்தநல்லூர் சென்று பயாட் நிறுவனத்தில் பணம் செலுத்தியதாக கூறுவதும் என்னை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு அவர்கள் பணம் பெற்றுக் கொண்டார்கள் என்று கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.19 17:40:24 +0530

## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.73/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 4 | நாள் | : | 19.07.2025 |
| பெயர் | : | இசக்கி துரை | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 19th day of July 2025.

**எதிரிகள் ஆஜர்**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்மலையில் வசித்து வருகிறேன். HDFC வங்கியில் கடன் கொடுக்கும் கடன் வசூலிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கரிவலம்வந்தநல்லூர் பயாட் நிறுவனத்தின் காவலர் பயிற்சி பெற்றேன். 2012 ம் ஆண்டு அவ்வாறு பயிற்சிக்கு சேர்ந்தேன். நான் அவ்வாறு பயிற்றி பெறுவதற்கு ரூ.35,000/- பணம் செலுத்தினேன். என் அப்பா அங்கே சேர்த்துவிட்டார். எங்கள் ஊருக்கு பக்கத்து ஊரைச் சேர்ந்த ராமவேல் மற்றும் சதிஷ் ஆகியோரும் அங்கு படித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் நிறை பேர் படித்துக் கொண்டிருந்தார்கள். 1 ம் எதிரி அந்த நிறுவனத்தின் உரிமையாளர். பிரபாகரன்

முதல்வராக இருந்தார். மற்றொருவர் அவ்வப்போது வந்து செல்வார். என்னை போலீசார் விசாரிக்கவில்லை. நான் பயாட் நிறுவனத்தில் படித்தது பற்றி சாட்சியமளிள வேண்டி போலீசார் அழைத்தார்கள். நான் பயாட் நிறுவன விடுதியில் தங்கி படித்தேன். நாங்கள் விடுதியில் தங்கி படித்துக் கொண்டிருந்தபோது மலையடிப்பட்டி பகுதியில் உள்ள தென்னந்தோப்பிற்கு 1ம் எதிரி அழைத்துச் சென்றார். புதிதாக பயிற்சி நிலையம் அமைக்கவிருப்பதாக கூறி எங்களை அழைத்துச் சென்றார்கள். சதிஷ் மற்றும் ராம வேலுவும் வந்தார்கள். அங்கு வேறு யாரும் இல்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அவ்வாறு விசாரித்தபோது எங்கள் நிறுவனத்தின் துணை முதல்வர் ராஜராம் பாறைப்பட்டி மலையடிவாரத்தில் உள்ள தென்னந்தோப்பிற்கு அழைத்துச் சென்றார் என்றும் அங்கு ஒருவர் மட்டும் நின்று கொண்டு மற்றவர்களை பார்த்து பேசிக்கொண்டிருநதார் என்றும் அப்போது நாங்கள் மூவரும் அங்கு சென்று சேர்ந்தோம் என்றும் நாங்கள் அங்கு சென்றதும் ராஜராம் மற்றவர்களுடன் என்னை அமரும்படி கூறிவிட்டு பேசத் துவங்கினார் என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு ராஜராம் பேசும்போது நாமெல்லாம் புரட்சி செய்தால் ஒழிய முன்னேற முடியாது நம்முள் இரகசியம் காக்கப்படவேண்டும் நமது இயக்கம் மாவேயிஸ்ட் இயக்கம் அது சிறப்பாக செயல்பட அனைத்து ஏற்பாடுகளையும்

செய்வோம். நமது இயக்கம் வெற்றிபெற ஆயுதம் ஏந்துவது தவிர வேறு வழியில்லை மக்கள் விரோத அரசின் முறையை வன்முறைமூலம் மட்டுமே ஒழிக்க முடியும் ஏகாதிபத்திய தரகு முதலாளிய நிலவுடைமை சமுதாயத்தை தூக்கி எரிந்து மக்கள் அதிகாரம் படைக்க யுத்தத்தை தொடுக்க வேண்டும் என்று பேசினார் என்றால் சரியல்ல. முள்ளை முள்ளால் எடுப்பது போல வன்முறையால் மட்டுமே அரசு பாதுகாக்கப்பட முடியும் புரட்சி போரின் மூலமே சுரண்டல் அமைப்பை தூக்கி எறிய முடியும். உலக வரலாறு காட்டும் பாதையும் அதுதான் மாபெரும் சமூக மாற்றங்களும் மக்களின் விடுதலைகளும் ஆயுதப்புரட்சியின் மூலமே நடந்துள்ளன எனவே நக்சல் பாரி பாதையை நமது பாதை என்பதை முழு மனதாக கடைப்பிடிக்க வேண்டுமென்று பேசினார் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வாறு பேசியதும் எனக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது என்றும் உறுப்பினர்களாக சேர்த்தால் எல்லாச் சலுகைகளையும் இயக்கத்தின் மூலம் அடையாளம் என்று கூறி சில துண்டுபிரசுரங்களை கொடுத்து படிக்கச் சொல்லி ஆயுதப்போராட்டம் நடத்த ஆலோசனை வழங்கி உறுப்பினராக சேரும்படி தூண்டினார் என்றும் இயக்கத்திற்கு ஆதரவு தரும்படி கேட்டுக்கொண்டார் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதன்பின் தீவிரவாத இயக்கத்தில் சேரும்படி அடிக்கடி ராஜாராம் என்னை அழைத்ததால் நான் பயந்து போய் சில நாட்கள் பயிற்சி நிறுவனத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. ஆனால் தொடர்ந்து படிக்கவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் பயிற்சி நிலையத்தை மூடிவிட்டார்கள் வெளிநாட்டிற்கு

வேலைக்கு ஆட்களை அனுப்பி வைப்பதாக கூறி பணம் பெற்றுக் கொண்டு ஆட்களை அனுப்பி வைக்காததால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு நிறுவனம் மூடப்பட்டதாக தெரிந்து கொண்டேன். எதிரிகள் நான் படித்த பயிற்சி நிறுவனத்தின் நிறுவனர், முதல்வர், வழிகாட்டி என்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.19 17:40:29 +0530